| வழங்கலிலுள்ள கடன் பிணைகள் | - | - | - | - | 46,379 | 46,379 |
| ஏனைய பொறுப்புக்கள் | - | - | - | - | 34,982 | 34,982 |
| கீழ்நிலை கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் | - | - | - | - | 17,176 | 17,176 |
| பொறுப்புக்களானது விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள குழுக்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது | - | - | - | - | - | - |
| **31 டிசம்பர் 2017இல் உள்ளவாரான மொத்தம் (கணக்காய்வு செய்யப்பட்டது)** | **50,195** | **1,543** | **12,996** | **64,734** | **539,774** | **604,508** |
| **இலபாம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள நிதியியல் பொறுப்புக்கள்** | | | | | | |
| வங்கி வைப்புக்கள் | - | - | 718 | 718 | - | 718 |
| வாடிக்கையாளர் கணக்குகள் | - | - | 6,447 | 6,447 | - | 6,447 |
| வழங்கலிலுள்ள கடன் பிணைகள் | - | - | 5,670 | 5,670 | - | 5,670 |
| குறுகிய நிலைகள் | 3,763 | - | - | 3,763 | - | 3,763 |
| | 3,763 | - | 12,835 | 16,598 | - | 16,598 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 62,917 | 2,795 | - | 65,712 | - | 65,712 |
| வங்கி வைப்புக்கள் | - | - | - | - | 32,872 | 32,872 |
| வாடிக்கையாளர் கணக்குகள் | - | - | - | - | 338,185 | 338,185 |
| மறுசீரமைப்பு ஒப்பந்தம் மற்றும் பிற ஒத்துழைப்பு கடன் | - | - | - | - | 37,692 | 37,692 |
| வழங்கலிலுள்ள கடன் பிணைகள் | - | - | - | - | 46,700 | 46,700 |
| ஏனைய பொறுப்புக்கள் | - | - | - | - | 32,958 | 32,958 |
| கீழ்நிலை கடன்கள் மற்றும் ஏனைய கடன்கள் | - | - | - | - | 19,523 | 19,523 |
| | | | | - | 958 | 958 |
| **31 டிசம்பர் 2016இல் உள்ளவாரான மொத்தம் (கணக்காய்வு செய்யப்பட்டது)** | **66,680** | **2,795** | **12,835** | **82,310** | **508,888** | **591,198** |

## ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி, இலங்கை

ரூ.ஆயிரம்

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | நடப்பு காலப்பகுதி 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2016 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| மொத்த கடன்களும் வருமதிகளும் | 81,146,901 | 68,429,313 |
| (கழி): தனிப்பட்ட பெறுமதிக் குறைப்பு | (701,944 ) | (525,688) |
| திரண்ட பெறுமதிக் குறைப்பு | (335,375 ) | (308,645) |
| **இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ளவை உள்ளடங்கலாக தேறிய கடன்கள் மற்றும் வருமதிகள்** | **80,109,582** | **67,594,980** |
| (கழி): இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - |
| **தேறிய கடன்கள் மற்றும் வருமதிகள்** | **80,109,582** | **67,594,980** |

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் - பொருள் ரீதியாக | நடப்பு காலப்பகுதி 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **பொருள் ரீதியாக - உள்நாட்டு நாணயம்** | | |
| மேலதிக பற்றுகள் | 9,657,297 | 13,169,349 |
| தவணைக் கடன்கள் | 18,326,829 | 14,780,922 |
| குத்தகை வாடகை வருமதிகள் | - | - |
| கடன் அட்டைகள் | 6,322,299 | 5,582,137 |
| அடகு | - | - |
| ஏனைய கடன்கள் | 17,617,518 | 13,397,579 |
| **உப தொகை** | **51,923,943** | **46,929,987** |
| **பொருள் ரீதியாக - வெளிநாட்டு நாணயம்** | | |
| மேலதிக பற்றுகள் | 1,328,559 | 1,064,761 |
| தவணைக் கடன்கள் | 10,669,419 | 8,636,740 |
| ஏனைய கடன்கள் | 17,224,980 | 11,797,826 |
| **உப தொகை** | **29,222,958** | **21,499,327** |
| **தொகை** | **81,146,901** | **68,429,314** |

| ஆண்டிற்கான ஏனைய வாடிக்கையாளர்கஞ்கான கடன்களின் மற்றும் வருமதிகளின் தனிப்பட்ட மற்றும் திரண்ட பெறுமதி குறைப்புக்களின் அசைவுகள் | நடப்பு காலப் பகுதி 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **தனிப்பட்ட பெறுமதி குறைப்பு** | | |
| ஆரம்ப மீதி | 525,688 | 17,884 |
| இலாபக்கூற்றில் விதிக்கப்பட்டது/மீள் எழுதப்பட்டது | 341,823 | 612,053 |
| காலப்பகுதியில் பதிவளிக்கப்பட்டவை | (165,567 ) | (104,249) |
| ஏனைய அசைவுகள் | - | - |
| **இறுதி மீதி** | **701,944** | **525,688** |
| திரட்டிய பெறுமதி குறைப்பு | | |
| ஆரம்ப மீதி | 308,645 | 308,634 |
| இலாபக்கூற்றில் விதிக்கப்பட்டது/மீள் எழுதப்பட்டது | 23,001 | (796) |
| ஏனைய அசைவுகள் | 3,729 | 807 |
| **இறுதி மீதி** | **335,375** | **308,645** |
| **மொத்த பெறுமதி குறைப்பு** | **1,037,319** | **834,333** |

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை - பொருள் ரீதியாக | நடப்பு காலப் பகுதி 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| **பொருள் ரீதியாக - உள்நாட்டு நாணயம்** | | |
| கேள்வி வைப்புக்கள் (நடப்பு கணக்குகள்) | 19,236,915 | 12,646,723 |
| சேமிப்பு வைப்புக்கள் | 17,181,321 | 20,088,395 |
| நிலையான வைப்புக்கள் | 28,612,280 | 19,846,507 |
| ஏனைய வைப்புக்கள் | 1,984,247 | 2,526,747 |
| **உப தொகை** | **67,014,763** | **55,108,372** |
| **பொருள் ரீதியாக - வெளிநாட்டு நாணயம்** | | |
| கேள்வி வைப்புக்கள்(நடப்பு கணக்குகள்) | 18,125,699 | 18,090,491 |
| சேமிப்பு வைப்புக்கள் | 12,945,277 | 29,608,761 |
| நிலையான வைப்புக்கள் | 3,365,833 | 2,795,974 |
| ஏனைய வைப்புக்கள் | 6,226,367 | 5,377,579 |
| **உப தொகை** | **40,663,176** | **55,872,805** |
| **தொகை** | **107,677,939** | **110,981,177** |

## ஸ்டான்டர்ட் சார்டர்ட் வங்கி, இலங்கை

ரூ.ஆயிரம்

### நிதியியல் சாதனங்களின் அளவீட்டு அடிப்படையிலான பகுப்பு

| 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | மு.வ.வை | கடன் தீர்ப்பனவுச் செலவு | வி.கி.கூ. | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | - | - | 9,065,723 | - | - | 9,065,723 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | - | - | - | 4,157,993 | - | - | 4,157,993 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | - | - | - | 29,957,613 | - | - | 29,957,613 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,492,680 | - | - | - | - | - | 1,492,680 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள் | - | - | - | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 5,305,090 | - | - | 5,305,090 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 80,109,582 | - | - | 80,109,582 |
| நிதியியல் முதலீடுகள் | 1,758,455 | - | - | - | 26,235,643 | - | 27,994,098 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **3,251,135** | **-** | **-** | **128,596,001** | **26,235,643** | **-** | **158,082,779** |

| 31/12/2017 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | கடன் தீர்ப்பனவுச் செலவு | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | - | - | 14,439,370 | - | 14,439,370 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 1,456,758 | - | - | - | 1,456,758 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | - | - | - | - | - |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - | 107,677,939 | - | 107,677,939 |
| ஏனைய கடன்பாடுகள் | - | - | 503,945 | - | 503,945 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | - | - | - | - | - |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **1,456,758** | **-** | **122,621,254** | **-** | **124,078,012** |

| 31/12/2016 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | மு.வ.வை | கடன் தீர்ப்பனவுச் செலவு | வி.கி.கூ. | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | | | | | |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவைகள் | - | - | - | 6,886,081 | - | - | 6,886,081 |
| மத்திய வங்கிகளுடனான மீதிகள் | - | - | - | 3,651,548 | - | - | 3,651,548 |
| வங்கிகளிலுள்ள இருப்புக்கள் | - | - | - | 26,249,651 | - | - | 26,249,651 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 749,113 | - | - | - | - | - | 749,113 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் சொத்துக்கள் | - | - | - | - | - | - | - |
| வங்கிகளுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 8,768,830 | - | - | 8,768,830 |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கான கடன்கள் மற்றும் வருமதிகள் | - | - | - | 67,594,980 | - | - | 67,594,980 |
| நிதியியல் முதலீடுகள் | 4,775,801 | - | - | - | 24,159,083 | - | 28,934,884 |
| **மொத்த நிதியியல் சொத்துக்கள்** | **5,524,914** | **-** | **-** | **113,151,090** | **24,159,083** | **-** | **142,835,087** |

| 31/12/2016 இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | வ.வை | இ.அ.ந. ஊ.நி.ம. நி | கடன் தீர்ப்பனவுச் செலவு | காப்பு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| **பொறுப்புக்கள்** | | | | | |
| வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியவை | - | - | 4,586,129 | - | 4,586,129 |
| பெறுதி நிதியியல் சாதனங்கள் | 733,609 | - | - | - | 733,609 |
| இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மிதிப்பீட்டில் உள்ள ஏனைய நிதியியல் பொறுப்புக்கள் | - | - | - | - | - |
| ஏனைய வாடிக்கையாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டியவை | - | - | 110,341,360 | - | 110,341,360 |
| ஏனைய கடன்பாடுகள் | - | - | 112,330 | - | 112,330 |
| வழங்கப்பட்ட படுகடன் பிணைகள் | - | - | - | - | - |
| **மொத்த நிதியியல் பொறுப்புக்கள்** | **733,609** | **-** | **115,039,819** | **-** | **115,773,428** |

வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டிருப்பவை - வ.வை
இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டுக்காக நியமிக்கப்பட்டவை - இ.அ.ந.ஊ.நி.ம.நி
கடன்கள் மற்றும் வருமதிகள்/கடன் தீர்ப்பனவிலுள்ள வைப்புக்கள்/கடன் தீர்ப்பனவுச் செலவு
முதிர்ச்சியடையும் வைக்கப்பட்டிருப்பவை - மு.வ.வை
விற்பனைக்குக் கிடைக்கக்கூடியவை - வி.கி.கூ
நியாய மதிப்பீட்டுச் சாதனங்கள் மற்றும் காசுப்பய்ச்சல் - காப்பு

## ஸ்டான்டர்ட் சார்டர்ட் வரையறுக்கப்பட்ட பொதுக்கம்பனி

அ.டொலர்.மில்

| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | நடப்பு காலப் பகுதி 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் | 256,981 | 235,902 |
| தனிப்பட்ட பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு | (5,237 ) | (5,667 ) |
| திரண்ட பெறுமதிக் குறைப்பு ஏற்பாடு | (465 ) | (687 ) |
| | **251,279** | **229,548** |
| இலாபம் அல்லது நட்ட ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ளவை உள்ளடங்கலாக | (2,572 ) | (2,855 ) |
| **தேறிய கடன்கள் மற்றும் வருமதிகளும்** | **248,707** | **226,693** |

| ஏனைய வாடிக்கையாளர்களுக்கும் வங்கிகளுக்கும் கொடுக்கவேண்டியவை - பொருள் ரீதியாகநடப்பு காலப் பகுதி | நடப்பு காலப் பகுதி 31/12/2017இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) | முன்னைய காலப்பகுதி 31/12/2016இல் உள்ளவாறு (கணக்காய்வு செய்யப்பட்டது) |
|---|---|---|
| வாடிக்கையாளர் கணக்குகள் | 370,509 | 338,185 |
| வாடிக்கையாளர் கணக்குகள். அடங்கலாக, இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய மதிப்பீட்டில் உள்ள நிதியியல் பொறுப்புக்கள் | 5,236 | 6,447 |
| **மொத்தம்** | **375,745** | **344,632** |

## அத்தாட்சிப்படுத்துகை:

2017 டிசம்பர் 31ல் முடிவடைந்த பன்னிரண்டு மாதங்களுக்கென மேலே சுருக்கமாகத் தரப்பட்டுள்ள நிதித் தகவல்கள், இலங்கைக் கணக்கியல் தராதரங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாகத் தொகுக்கப்பட்ட வங்கியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேலுள்ள அறிக்கைகள், இலங்கை மத்திய வங்கியினால் பரிந்துரைக்கப்பட்ட வடிவமைப்பு மற்றும் வரைவிலக்கணங்களுக்கு அமைவாகவே தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கையானது KPMG இனால் கணக்காய்வு செய்யப்பட்டு, மாறுபடாத அபிப்பிராயத்துடன், விஷேச சொல்லழுத்தமாக, (அ) வங்கியினால் இலங்கை உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட பற்றுக்கள் வரி தொடர்பான ஆணை குறிப்பும், அரசால் கையகப்படுத்தப்பட்ட வங்கியின் ஒரு அறுதி சொத்தை பற்றியும், அவர்களது 28ம் மார்ச் 2018இல் கணக்காய்வு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

ஜிம் மெமக்காபி
(கையொப்பமிடப்பட்டது) பிரதம நிறைவேற்று அதிகாரி
திகதி: 28/03/18

நிஷானி ஆரியவன்ச
(கையொப்பமிடப்பட்டது) நிதியியல் கட்டுப்பாட்டாளர்
திகதி: 28/03/18

Standard Chartered

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

முன்னணி சர்வதேச வங்கியியல் குழுமமாக ஸ்டான்டர்ட் சார்ட்டட் அமைந்துள்ளதுடன், உலகின் வினைத்திறன் வாய்ந்த சந்தைகளில் 150 வருட காலம் இயங்கிய வரலாற்றைக் கொண்டுள்ளது. முதலீடு, வியாபாரம் மற்றும் வளங்களை நாடும் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த மக்கள் மற்றும் நிறுவனங்களுடன் நாம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகிறோம். லண்டனில் தலைமையகத்தைக் கொண்டுள்ளதுடன், லண்டன் மற்றும் ஹொங் கொங் பங்குப்பரிவர்த்தனைகளில் பட்டியலிடப்பட்டுள்ளது. சந்தை மூலதனவாக்கத்தின் பிரகாரம் FTSE 100 ல் பட்டியலிடப்பட்ட நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. வியாபார நிதியியல் மற்றும் வணிக வங்கியியல் போன்றன ஸ்டான்டர்ட் சார்ட்டட் வேரூன்றியுள்ளதுடன், அதன் வரலாற்றில் வெற்றிகரமான இயக்கத்துக்கு பங்களிப்பு வழங்கியுள்ளன. வங்கியின் வர்த்தக நாம உறுதி மொழி என்பது, Here for good என்பதாக அமைந்துள்ளதுடன், அது மேற்கொள்ளும் ஒவ்வொரு தீர்மானத்திலும் உட்பதிந்துள்ளது. தான் இயங்கும் வாடிக்கையாளர்கள், பங்காளர்கள் மற்றும் நாடுகளில் இதை பின்பற்றி வருகிறது.

### கூட்டாண்மை ஆளுகைக்கான எமது ஒன்றிணைக்கப்பட்ட அணுகு முறை

முகாமைத்துவம் மற்றும் பணிப்பாளர் சபை ஆகியவற்றுக்கிடையில் வெளிப்படைத்தன்மை மற்றும் திறந்த தன்மை ஆகியவற்றை பேணுவதனூடாக வினைத்திறன் வாய்ந்த ஆளுகையை பேண முடியும் என்பதில் ஸ்டான்டர்ட் சார்ட்டட் நம்பிக்கை கொண்டுள்ளது. துணை நிறுவனங்கள் மற்றும் கிளைகளினூடாக செயற்படுத்தப்படும் குழும கட்டமைப்பை ஸ்டான்டர்ட் சார்ட்டட் கொண்டுள்ளது. மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டில், ஆளுகை என்பது நிறுவனத்தின் நான்கு புவியியல் பிராந்தியங்களில் நிர்வகிக்கப்பட்டிருந்தது. குறித்த பிராந்தியத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் அலுவலகத்தினூடாக, வியாபாரங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலமும் நிர்வகிக்கப்படுகிறது. வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாக, வங்கியின் பங்காளர்களில், அரசாங்கங்கள், ஒழுங்குபடுத்துநர்கள், பங்காளர்கள், ஊழியர்கள், விநியோகஸ்த்தர்கள் மற்றும் இயங்கும் சமூகங்கள் போன்றன உள்ளடங்குகின்றன.

நிறுவனங்களுக்கு வினைத்திறன் வாய்ந்த கூட்டாண்மை மேலாண்மை கலாசாரத்தை கொண்டிருப்பதற்கு சிறந்த கலாசாரம் மற்றும் நடத்தைகளை கொண்டிருப்பது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதில் வங்கி நம்பிக்கை கொண்டுள்ளது. சகல ஊழியர்களும் ஆளுகை கட்டமைப்பை பின்பற்றுவது மற்றும் ஒழுக்க கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்களை பின்பற்றுவது போன்றன சகல ஊழியர்களின் பொறுப்பாக அமைந்துள்ளன. ஊழியர்கள் நடந்து கொள்ளும் விதத்தில் அதிகளவு கவனம் செலுத்தப்படுவதுடன், அவர்களுக்கு அவசியமான ஆளுமைகள், பெறுமதிகள் மற்றும் அனுபவங்கள் போன்றன பொறுப்புகளுடன் இணைந்ததாக காணப்படும்.

### ஸ்டான்டர்ட் சார்ட்டட் குழும பணிப்பாளர் சபை

குழுமத்தின் நீண்டகால வெற்றிகரமாக செயற்பாட்டில் பணிப்பாளர் சபையின் ஒருமித்த செயற்பாடு ஏதுவாக அமைந்துள்ளது. வினைத்திறன் வாய்ந்த கட்டுப்பாடுகளுக்கு அவசியமான தலைமைத்துவத்தையும் உறுதி செய்கிறது. இச்சபையினால் குழுமத்தின் மூலோபாய வழிகாட்டல் வழங்கப்படுவதுடன், மூலோபாயத்தை அங்கிகரித்து, குறித்த மூலோபாய எதிர்பார்ப்புகளை எய்துவதற்கு அவசியமான வளங்களை குழுமம் கொண்டிருப்பதையும் உறுதி செய்கிறது. சபை தனது தீர்மானங்கள் மற்றும் தனது பொறுப்புகள் குறித்து கவனம் செலுத்துவதுடன், குழுமத்தின் ஊழியர்கள், பங்குதாரர்கள், ஒழுங்குபடுத்துநர்கள், வாடிக்கையாளர்கள், விநியோகத்தர்கள், சூழல் மற்றும் சமூகங்கள் குறித்த தான் இயங்கும் சகல பிரிவுகளும் குறித்து கவனம் செலுத்துகிறது.

பணிப்பாளர் சபையில் அடங்கியிருக்கும் அங்கத்தவர்கள் பரந்தளவு ஆளுமைகள், அனுபவம், பின்புலம் மற்றும் சரியான கண்ணோட்டத்தையும் கொண்டுள்ளனர். பணிப்பாளர் சபையின் ஒன்பது பணிப்பாளர்கள் ஆசியா, ஆபிரிக்கா அல்லது மத்திய கிழக்கு பிராந்தியங்களில் வசித்திருந்தனர் அல்லது.'.மற்றும் பணியாற்றியிருந்தனர். வங்கியின் சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்கள் அனைவரும் வங்கியியல், நிதியியல், இடர் மற்றும் கணக்கியல் அனுபவத்தை கொண்டுள்ளனர்.

2017 நவம்பர் மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில், சுயாதீன நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக கொஸி ஒகொன்ஜோ-இவெலா பணியாற்றுவதுடன், தலைவருக்கு குழுமத்தின் சார்பாக வழங்க வேண்டிய மேலதிக உதவிகளை வழங்குகிறார். வங்கியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளர்களின் பணிக்காலத்தில் அவர்களுக்கு பொருத்தமான பணிகளை உறுதி செய்வது வங்கி கவனம் செலுத்தியுள்ளது.

### பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்

ஸ்டான்டர்ட் சார்ட்டட் நிலையான பிரசன்னத்தைக் கொண்டுள்ளதுடன், நீண்ட கால வரலாற்றையும், பரந்தளவு பணிப்பாளர் சபை அங்கத்துவத்தையும் கொண்டுள்ளது. ஆளுமைகள், அறிவு, அனுபவம் மற்றும் கலாசார வேறுபாடுகள் போன்றன பணிப்பாளர் சபை கலந்துரையாடல்களில் வலுச்சேர்ப்பதோடு, அதிகளவு வினைத்திறன் வாய்ந்த பணிப்பாளர் சபைக்கு பங்களிப்பு வழங்குகிறது. பாலின சமத்துவத்திலும் சிறந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆண்டில் இதற்கான அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டிருந்ததுடன், பணிப்பாளர் சபை பன்முகப்படுத்தல் கொள்கையும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. தற்போது பணிப்பாளர் சபையில் 30 சதவீதமானவர்கள் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### மூலோபாய பிரச்சினைகள் மீதான கவனம்

எதிர்வரும் காலங்களில் எதிர்கொள்ளக்கூடிய சவால்கள் பற்றி வங்கி அறிந்துள்ளதுடன், குழுமம் மற்றும் சர்வதேச வங்கியியல் துறையில் எழக்கூடிய சவால்கள் பற்றி அறிந்துள்ளது. ஒழுங்குபடுத்தலில் எழக்கூடிய உறுதியற்ற தன்மை என்பது கொள்கை வரைவாளர்களுக்கு குறித்த சூழல்களுக்கு பொருத்தமான திட்டங்களை வரைந்து, அவற்றினூடாக பெறுமதி சேர்த்து பங்குதாரர்களுக்கு நிலைபேறான வருமானத்தை ஏற்படுத்திக்கொடுப்பது பற்றி கவனம் செலுத்துகிறது. இதேவேளை, வங்கி இயங்கும் சந்தைகளில் காணப்படும் பொருளாதார நிலை என்பது தொடர்ந்தும் உறுதியற்றதாக அமைந்திருக்கும். 2015ல் நிர்ணயிக்கப்பட்ட வியாபாரத் திட்டம் என்பது, தற்போது காணப்படும் சூழல்களுக்கு பொருத்தமானதாக அமைந்துள்ளது. சிறந்த வாடிக்கையாளர் அனுபவங்களை பெற்றுக்கொடுப்பதற்கு புதிய தொழில்நுட்பங்களில் முதலீடுகளை மேற்கொள்வது என்பது மற்றும் முன்நோக்கிய செயற்பாடுகளுக்கு வலிமையான கட்டுப்படுத்தல்கள் போன்றன இன்றியமையாததாக அமைந்துள்ளன.

தற்போது ஸ்டான்டர்ட் சார்ட்டட் குழுமத்திடம் உறுதியான மூலதன இருப்பு காணப்படுகிறது. திட்டத்துக்கமைய செயலாற்ற வங்கி கவனம் செலுத்துவதுடன், சூழல்நிலைகளை பின்பற்ற செயலாற்றுவது பற்றியும் கவனம் செலுத்தும். உறுதியான அடித்தளங்களை கொண்டுள்ள இந்த வங்கியின் மூலமாக, வருமானத்தில் வளர்ச்சியை ஏற்படுத்துவது என்பது உள்ளடங்கியுள்ளது. பங்காளர்களுக்கு உறுதியான செலவீன மற்றும் இடர் முகாமைத்துவ வருமதிகளை பெற்றுக்கொடுப்பது பங்காளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி கவனம் செலுத்துகிறது.

கூட்டாண்மை மற்றும் நிறுவனசார் வங்கியியல் செயற்பாடுகளில் மேம்படுத்தல்களை வங்கி மேற்கொண்டுள்ளது. தனது சில்லறை வங்கியியல் வியாபாரத்தை மாற்றியமைத்த வண்ணமும் உள்ளது. வங்கி தனது வணிக வங்கியியல் செயற்பாடுகளை நீண்ட கால அடிப்படையில் வருமானங்களை பெற்றுத்தரக்கூடிய வகையில் மாற்றியமைத்துள்ளது. புதிதாக மாற்றியமைக்கப்பட்டுள்ள குழுமக் கட்டமைப்பு என்பது, தற்போது வலிமையாக உள்வாங்கப்பட்டுள்ளதுடன், உள்நாட்டு முகாமைத்துவம் தற்போது குழுமத்தின் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளில் செல்வாக்கு செலுத்தும் தன்மை கொண்டுள்ளன. இதன் மூலமாக வங்கியின் உறுதியான மத்திய இயலுமைகள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

### நிதி அறிக்கையிடல்

நிதி அறிக்கையிடல் தொடர்பான சபையின் பிரதான செயற்பாடு என்பது குழுமத்தினால் வெளியிடப்படும் நிதி அறிக்கைகள் மற்றும் குழுமத்தின் நிதிப் பெறுபேறுகள் பற்றிய உத்தியோகபூர்வ அறிவித்தல்கள், நிதி அறிக்கையிடல் மத்தியஸ்த்தங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றில் காணப்படும் கணக்கீடு சம்பந்தமான பிரச்சினைகள் போன்றவற்றை மேற்பார்வை செய்வதாக அமைந்துள்ளது.

குழுமத்தின் நிதி அணி மற்றும் நாடுகளுக்கான அறிக்கை வழங்கும் அணிகள் ஆய்வு செயன்முறைகளை முன்னெடுப்பதுடன், கணக்கியல் நியமங்கள், சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் விடயங்களுக்கமைய ஒழுக்கத்தை உறுதி செய்கின்றன. தினசரி அடிப்படையில் ஈடுபாடுகளை பேணி, மதிப்பீடு செய்து, நிர்வகித்து சம்பந்தப்பட்ட விடயங்களை தீர்த்து வைக்கும் நடவடிக்கைகளையும் கொண்டுள்ளது. நாடுகளுக்கான அறிக்கையிடலை வழங்கும் அணியினரால் சமர்ப்பிக்கப்படும் சகல நிதி தகவல்களும் குறித்த நாட்டில் அமைந்துள்ள நிதிக்கட்டுப்பாட்டாளரால் சான்றளிக்கப்பட்டிருக்கும்.

குழுமத்தினால் பின்பற்றப்படும் கணக்கியல் கொள்கைகள் மற்றும் செயன்முறைகள் போன்றன பொருத்தமானவையாக இருப்பதையும், தெளிவானவையாகவும், முழுமையடைந்திருப்பதையும் உறுதி செய்யும் பொறுப்பை குழுமத்தின் நிதியியல் அணி கொண்டுள்ளது. நிதி அறிக்கை வெளிப்படுத்தல்களில் UK நிதி கொள்கை, நிதி அறிக்கை சம்மேளனம் பிரசுரம் (FRC) மற்றும் PRA மற்றும் UK நிதியியல் பிரிவுடன் பரஸ்பர கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவை அனைத்தையும் மேற்பார்வை செய்வதுடன், குழுமத்தினால் வெளியிடப்படும் நிதி அறிக்கைகளின் நேர்மைத்தன்மை மற்றும் குழுமத்தின் நிதிப் பெறுபேறுகள் தொடர்பான முறையான அறிவித்தல்கள் மற்றும் நிதி தீர்மானங்கள் மற்றும் கணக்கியல் பிரச்சினைகள் போன்றவற்றை மீளாய்வு செய்வது போன்ற நடவடிக்கைகளை கண்காணித்து வருகிறது.

### இடர் முகாமைத்துவம்

வினைத்திறன் வாய்ந்த இடர் முகாமைத்துவம் என்பது வங்கியின் நிலைபேறான வினைத்திறனுக்கு அத்தியாவசிய தேவையாக அமைந்துள்ளதுடன், வங்கியின் அனைத்து பங்காளர்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. எனவே, இது குழுமத்தின் நிதி மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவத்தின் மத்திய அங்கமாக அமைந்துள்ளது. குழுமத்தினால் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதி சேர்க்கப்படுவதுடன், அது இயங்கும் சமூகங்களில் பெறுமதியை சேர்த்து, இடர்களை நிர்வகித்தும், முன்னெடுத்தும் பங்காளர்களுக்கு வருமதிகளை ஏற்படுத்திக்கொடுக்கிறது. வங்கியின் இடர் முகாமைத்துவ கட்டமைப்பில், வங்கியினால் வியாபார பரந்த இடர்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

இடர்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன், அளவிடப்பட்டு அவை சுமூகமாக நிர்வகிக்கப்பட்டிருந்தன. இதனூடாக வங்கியின் நிலைபேறான செயற்திறன் முன்னெடுக்கப்படுவது உறுதி செய்யப்பட்டிருந்தது. எதிர்கொள்ளக்கூடிய இடர்களை இனங்காணல், மதிப்பிடல் மற்றும் கையாளல் தொடர்பான செயன்முறைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன. காணப்படும் பாரிய இடர்களான வியாபார மாதிரியை பாதிக்கக்கூடிய, எதிர்கால வினைத்திறனை பாதிக்கக்கூடிய, திரள்வுத்தன்மை அல்லது திவாலாகும் தன்மையை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு செயன்முறைகள் தொடர்பில் பணிப்பாளர் சபை திருப்தியடைந்துள்ளது. பணிப்பாளர் சபையின் இடர் கழகம், சபையின் சார்பாக, போதியளவு இடர் நிர்வாக ஏற்பாடுகளை மீளாய்வு செய்திருந்ததுடன், அத்துடன், குழுமத்தின் மூலோபாய திட்டத்துக்கமைய தற்போது காணப்படும் இடர் நிர்வாக கட்டமைப்புகள் தன்னிறைவடையக்கூடியதாக உள்ளதென உறுதி செய்துள்ளது.

குழுமத்தின் கொள்கை சார் தீர்மானமெடுத்தலில் இடர் மற்றும் ஒழுக்கநெறி செயற்பாடுகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. வலிமையான மற்றும் வினைத்திறன் வாய்ந்த வியாபாரங்களை கட்டியெழுப்புவதிலும் பிரதான பங்கை வகிக்கிறது. குழுமத்தின் இடர் முகாமைத்தவத்துடன் கூடிய வியாபாரத்திட்டங்கள் பற்றி பணிப்பாளர் சபையின் மேற்பார்வை காணப்பட்டது. வங்கி உறுதியான மூலதனத்தை கொண்டிருந்ததுடன், திரள்வு நிலையையும் பேணியிருந்தது. அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட அணியின் மூலமாக வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.

### வர்த்தக நாமம் மற்றும் பெறுமதிகள்

குழுமத்தின் இயக்கநிலை நிகழ்ச்சி நிரல் தொடர்பில் அதிகளவு ஈடுபாட்டை ஸ்டான்டர்ட் சார்ட்டட் கொண்டுள்ளது. 2017இல் வங்கி அதிகளவு முன்நோக்கி பயணித்துள்ளதுடன், வினைத்திறன் வாய்ந்த மற்றும் நிலைபேறான கட்டமைப்புகளையும் உட்கட்டமைப்பு வசதிகளையும் நிறுவுவதில் அதிகளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. இதனூடாக நிதிசார் குற்றச் செயல்களை இனங்காண்பதில் அதிகளவு பங்களிப்பை வழங்கும். sc.com/fightingfinancialcrime எனும் புதிய கட்டமைப்பை வங்கி உருவாக்கியுள்ளதுடன், இதனூடாக ஸ்டான்டர்ட் சார்ட்டட் மற்றும் ஏனையவர்கள் மேற்கொள்ளும் பங்களிப்பு பற்றிய விளக்கங்களை வழங்கியுள்ளது. சகல விதமான செயற்பாடுகளிலும் வங்கி கூர்மையான கவனத்தை செலுத்தியுள்ளதுடன், நிதிசார் குற்றச் செயல்களை தடுப்பது மட்டுமின்றி, நியமங்களுக்கு மாறான செயற்பாடுகள் தொடர்பிலும் பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. ஒவ்வொரு ஊழியரும் சரியான தீர்மானத்தை மேற்கொண்டு சிறந்த தீர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில், வங்கி செயற்பாடுகள், பெறுமதிகள் மற்றும் மூலோபாயங்கள் போன்றவற்றில் அதிகளவு கவனம் செலுத்தியுள்ளது. இது சரியான செயற்பாடு என்பதால் வங்கி இதனை முன்னெடுப்பதுடன், நிலைபேறான நிறுவனமாக வங்கியை திகழச் செய்ய இது உதவுவதுடன், பங்காளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையிலும் அமைந்துள்ளது.

### நிலைபேறாண்மை

தனது வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளர்களுடன் இணைந்து சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியை பிரதான பொருளாதார துறைகளில் ஏற்படுத்துவதற்காக வங்கி செயலாற்றி வருகிறது. அதனூடாக நிலைபேறான வளர்ச்சி எய்தப்படுவதுடன், வழங்கல் மற்றும் செயற்பாடுகள் போன்றவற்றால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றியும் கவனம் செலுத்தி சமூகங்களில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. வங்கியின் நிலைபேறாண்மை நிகழ்ச்சி நிரலுக்கமைவாக, குழுமத்தினால் சூழல் மற்றும் சமூக இடர் முகாமைத்துவம் போன்ற பிரச்சினைகளை குறைப்பது தொடர்பான பல விடயங்கள் மீளாய்வு செய்யப்பட்டிருந்தன. இதில் குழுமத்தின் அறிக்கைகளை புதுப்பிப்பது தொடர்பான செயற்பாடுகளும் அடங்கியுள்ளன. சபை இந்த மீளாய்வை வரவேற்றிருந்ததுடன், அவை குழுமத்தின் வியாபார இலாகாவுக்குட்பட்டதாக அமைந்திருந்ததுடன், குழுமத்தின் இடர் வெளிப்படுத்தலில் பிரதிபலித்திருந்தது.

### வாடிக்கையாளர் மீதான கவனிப்பு

ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, வாடிக்கையாளர்களுக்கு முக்கியத்துவமளித்து அவர்களுக்கு வழங்கும் அனுபவத்தை மேம்படுத்துவதில் அதிகளவு முதலீட்டை மேற்கொண்டிருந்தது. உதாரணமாக, கூட்டாண்மை மற்றும் நிறுவனசார் வங்கியியலை பொறுத்தமட்டில், தனது டிஜிட்டல் செயற்பாடுகளை மேம்படுத்தியிருந்தது. சில்லறை வங்கியியலை பொறுத்தமட்டில், வீடியோ வங்கியியல் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இதில் குரல் biometric தொழில்நுட்பமும் உள்ளடங்கியுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு புத்தாக்கமான கொடுப்பனவு முறைகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், வணிக வங்கியியலை பொறுத்தமட்டில், வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுக்கும் காலப்பகுதியை குறைக்கும் நடவடிக்கைகளை வங்கி மேம்படுத்தியிருந்தது. வங்கியின் வாடிக்கையாளர் வலையமைப்புகளை மேம்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தியிருந்தது. தனியார் வங்கியியலை பொறுத்தமட்டில், ஆதன முகாமைத்துவ பிரிவு மேம்படுத்தப்பட்டிருந்தது. கணக்கு ஆரம்பிக்கும் செயன்முறையும் எளிமைப்படுத்தப்பட்டிருந்தது. வங்கியை எளிமையான, வேகமான மற்றும் சிறந்த நிறுவனமாக திகழச் செய்வதற்கு அதிகளவு முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

புத்தாக்கம் என்பதற்காக ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி என்பது அதிகளவு கௌரவிப்பை பெற்றுள்ளதுடன், அதன் புத்தாக்கம் மற்றும் உயர் வருமதிகள் போன்றவற்றில் வரும் ஆண்டுகளில் தங்கியிருக்கக்கூடியதாக இருக்கும்.

### அரசாங்கம் மற்றும் ஒழுங்குபடுத்தல் உறவுகள்

ஸ்டான்டர்ட் சார்ட்டட் வங்கி, வளர்ந்து வரும் சிக்கலான ஒழுங்கமைப்பு கட்டமைப்பு சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் செயற்பாடுகள் ஆகியவற்றுக்கு அமைவாக ஒவ்வொரு நாடுகளிலும் தனது செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்கும். சந்தைகளில் சட்டபூர்வமான மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்புகளை பின்பற்றுவதனூடாக, குழுமம் அந்நாடுகளின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்துள்ளது. பதிலாக, குழுமத்தின் வினைத்திறன் வாய்ந்த செயற்பாட்டுக்கு இந்த நடவடிக்கை பக்கபலமாக அமைந்துள்ளதுடன், பரந்தளவு நிதி கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றுக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளது.

வர்த்தக நாமம், பெறுமதிகள் மற்றும் செயற்பாட்டு குழு, சபை ஆகியன குழுமத்தின் பிரதான அரச மற்றும் ஒழுங்குபடுத்தல் உறவுகளை கண்காணிக்கும் பொறுப்பை கொண்டுள்ளன. இந்த உறவுகளின் தரம் மற்றும் ஈடுபாடு போன்றன மீதும் கவனம் செலுத்தப்படுகின்றன. தினசரி அடிப்படையில், ஒழுங்குபடுத்தல் மற்றும் பொது விவகார செயற்பாட்டு பிரிவு சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல்களில் ஏற்படும் மாற்றங்களை இனங்காண்பதற்கு பொறுப்பாக அமைந்துள்ளதுடன், அதனூடாக வங்கி அவற்றை பின்பற்றுவதை உறுதி செய்வதுடன், உறவுகளை பேணவும் உதவிகளை வழங்குகிறது.

அரசாங்கங்கள், ஒழுங்குபடுத்துநர்கள் மற்றும் கொள்கை வடிவமைப்பாளர்கள் ஆகியோருடன் சர்வதேச மற்றும் பிராந்திய மட்டத்தில் வங்கி ஈடுபாட்டைக் கொண்டுள்ளதுடன், அதனூடாக பிரதான கொள்கைப் பிரச்சினைகள் தொடர்பில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் உள்ளார்ந்த அம்சங்களையும் பகிர்ந்த வண்ணமுள்ளது. இந்த ஈடுபாடு என்பது வெவ்வேறு சந்தைகளில் தொடர்ச்சியான வழிமுறைகளை பின்பற்ற உதவுவதுடன், சிறந்த செயன்முறைகளை கொண்டுள்ளது. வங்கி சகல வெளிப்படையான தேவைகளையும் பூர்த்தி செய்துள்ளதுடன், அரசியல் செயற்பாடுகள் தொடர்பான விவரங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

அரசாங்கங்கள் மற்றும் இதர ஒழுங்குபடுத்துநர்களுடன் ஸ்டான்டர்ட் சார்ட்டடின் ஈடுபாடு என்பது தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதுடன், தொழிற்துறைசார்ந்த பணியாற்றல் குழுக்களுடன் இணைந்ததாக அமைந்துள்ளன.

**மேலே தரப்பட்டுள்ள விவரங்கள், குழுமத்தின் மேலாண்மை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களின் சாராம்சமாக அமைந்துள்ளது. முழுமையான அறிக்கையை, WWW.SC.COM எனும் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.**